1972 ஆகஸ்ட் 24]

(3) பருவ மழைக் காலத்தின்போது, நில நீரில் வரை யறுத்த அளவு மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதால், கோடைக் காலத்தில் சுமார் 2,000–3,000 ஏக்கரில் பயிரிட முடியும்.

(4) 20 அடிக்கு 20 அடி பரப்பளவில் 35 அடி முதல் 40 அடி ஆழம் வரை, கடினமான பாறை காணப்படும் வரை, பாசனக் கிணறுகள் இறக்குதல், கிணற்றின் தரையிலும் அதன் பக்கவாட்டி லும் சுமார் 20 அடி ஆழத்துக்கு 2 அங்குல விட்டமுள்ள துளைகளைத் துளையிடலாம். இத்துளைகளைச் சம்மட்டியால் அடித்துத் துளை யிடலாம். இத்துளைகளை இறக்குவதன் மூலம் கிணற்றில் அதிக நீர் ஊறிப் பெருகும்.

இணைப்பு III.

[173-ம் பக்கத்தில் 23-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

(அ) தமிழ்நாட்டில் எண்ணெய் வித்துக்களுக்கான ஆராய்ச்சிகள் திண்டிவனம், சேலம், கோயில்பட்டி, வேப்பங்குளம், பொள்ளாச்சி, கோயமுத்தூர் ஆகிய இடங்களில் உள்ள ஆராய்ச்சி நிலையங்களில் நடத்தப்படுகின்றன. அங்கு என்னென்ன எண்ணெய்வித்துக்கள் பற்றிய ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன என்ற விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது:—

(1) பிராந்திய ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம்—நிலக் கடலை, எள், ஆமணக்கு.

(2) ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், சேலம்—ஆமணக்கு.

(3) பிராந்திய ஆராய்ச்சி நிலையம், கோயில்பட்டி—சூரியகாந்திப்பூ.

(4) தென்னை ஆராய்ச்சி நிலையம், வேப்பங்குளம்—தென்னை.

(5) நிலக்கடலை ஆராய்ச்சி நிலையம், பொள்ளாச்சி—நிலக் கடலையும் மற்ற சில எண்ணெவித்துக்களும்.

(6) தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம்—நிலக் கடலையும், மற்ற எண்ணெவித்துக்களும்.

(இ) நல்ல குணங்களுடைய உயர் விளைச்சல் ரகங்களை தேர்ந் தெடுப்பதும், ஒட்டுச் சேர்த்துக் கண்டு பிடிப்பதும், கதிரியக்க முறை யில் இனக்கலப்பு செய்து கண்டு பிடித்தலும் போன்றவைகள், விதை களின் தரத்திற்காகவும், நிறைவான விளைச்சலுக்காகவும், ஆயிரக்

[1972 ஆகஸ்ட் 24

கணக்கான இனங்களை பல்வேறுபட்ட ஆராய்ச்சிகளைக் கையாண்டு தேர்ந்தெடுக்கப்படுகின்றன. தேவையான இரகங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு மற்ற இரகங்களுடன் தேவையான குணங்களும் விளைச்சல் திறனிலும் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பெருமளவு மாதிரி நிலங்களில் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்றன. அதே சமயத்தில் தனிப்பட்ட உழவர்களின் நிலங்களிலும் இவற்றின் குணங்கள் திறன் பெரிதும் சோதிக்கப்படுகின்றன. இந்த இனக் கலவைகள் இச்சோதனைகளுக்குப் பிறகு மாநில வெளியீட்டுக் குழுவினரால் இறுமாக வெளியிடப்படுகிறது.

(உ) இந்த உயர் வகை விதைகளால் மாநிலத்துக்கு கிடைக்கும் நற்பயன் கணிசமானது என்பதால் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு இலாப நட்ட அடிப்படையில் நிதி அளிக்கப்படுவதில்லை.

(எ) மூலநிலை, இரண்டாம், மூன்றும் நிலைகள் விதைப் பெருக்கப் பண்ணைகள் கீழ்க்கண்ட மாவட்டங்களில் செயல்படுகின்றன:—

1. கோயமுத்தூர்.
2. மதுரை.
3. திருச்சி.
4. தஞ்சாவூர்.
5. இராமநாதபுரம்.
6. செங்கற்பட்டு,
7. வட ஆர்க்காடு.
8. சேலம்.
9. தர்மபுரி.
10. தென் ஆர்க்காடு.

(ஐ) ஆரம்பகாலத்தில் நிலக்கடலையின் விலை அறுவடையின் போதும் கொள்முதல் செய்யும்போதும் அதிகமாக இருந்தது. ஆனால் விதைக்கும் போதும் விநியோகிக்கும்போதும் விலை குறைத்திருந்தது. கூட்டுறவு நிறுவனங்கள் சற்று இலாபமடைந்தன. தொடர்ந்து நிலக்கடலை விலையில் மாறுதல்கள் ஏற்பட்டதால் கூட்டுறவு நிறுவனங்கள் சற்று நட்டமடைந்தன. இந்த நட்டத்தை அரசு சரிகட்ட நேர்ந்தது, எனினும் கூட்டுறவு நிறுவனங்கள் இலாபத்தையே விரும்புவதாகத் தெரிகிறது. எனவே, மூன்றும் நிலை விதைப் பெருக்கத்தை ஏற்றுக்கொள்ள தயங்குகிறார்கள்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS